அய்யன் திருவள்ளுவர் - பேரறிஞர் அண்ணா - மகாகவி பாரதியார் - பாவேந்தர் பாரதிதாசன் - தமிழ்த் தென்றல் திரு.வி.க. - முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் - தந்தை பெரியார் - அண்ணல் அம்பேத்கர் - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெயர்களில்

# தமிழ்நாடு அரசின் விருதுகள்! 9 விருதாளர்கள் தேர்வு!



## திருவள்ளுவர் திருநாளான ஜன. 15 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

**சென்னை, ஜன. 5 –**

**திருவள்ளுவர் திருநாளன்று வழங்கப்படவுள்ள 2025–ஆம் ஆண்டிற்கான அய்யன் திருவள்ளுவர் விருது, 2024–ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா விருது, மகாகவி பாரதியார் விருது, தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, முத்தமிழறிஞர் கலைஞர் விருது உள்ளிட்ட ஒன்பது விருதுகளுக்குரிய விருதாளர்கள் தெரிவு செய்து தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

**விருதுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.1.2025 அன்று வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்**

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புக்களையும் அளித்து, அவர்தம் தமிழ்த்தொண்டுக்குப் பெருமை சேர்த்து வருவது குறிப்பிடத்தகுந்தது.

அவ்வகையில், இந்த ஆண்டு திருவள்ளுவர் திருநாள் விருதுகளுக்கான விருதாளர்கள் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

### அய்யன் திருவள்ளுவர் விருது



திருக்குறள் நெறி பரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து திருவள்ளுவர் விருது 1986ஆம் ஆண்டு முதல் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 39 அறிஞர்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். அவ்வரிசையில் 2025ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருதுக்கு "திருக்குறள் என்பதை கற்பது, கற்பிப்பது என்று மட்டும் இருந்துவிடாமல் அதனை வாழ்வியல் நெறியாகக் கொள்தல் வேண்டும்; குறள் காட்டும் வழியில் நாம் வாழ்தல் வேண்டும்; பிறருக்கு வழிகாட்ட வேண்டும்; வாழ்க்கையில் நடைபெறும் அனைத்து இன்பத் துன்ப நிகழ்வுகளையும் குறளாயத் தமிழ் முறைப்படி நடத்த வேண்டும்; குறள் வழி குடியரசு அமைப்போம் ஆகிய கொள்கையைக் கொண்டு செயலாற்றிவரும் **செந்தமிழ்ச் செம்மல் பெரும் புலவர் மு. படிக்கராமு** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### பேரறிஞர் அண்ணா விருது



தமிழ்ச் சமுதாயம் முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒருவருக்கு பேரறிஞர் அண்ணா விருது 2006ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 18 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. அவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு "திராவிட இயக்கக் குடும்பத்தில் பிறந்து பேச்சுக்கு இணையாக எழுத்தையும் ஆயுதமாகக் கொண்டவரும், எளிய விவசாய குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவரும், சட்டம் பயின்று சுதந்திர இந்தியாவை அதிரவைத்த மாணவர் போராட்டமான இந்தி ஆதிக்க எதிர்ப்பு போராட்டத்தில் முக்கியமான பங்கு வகித்தவரும் மாணவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே பாலமாகவும் போராட்ட ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டவரும் அண்ணாவை தலைவராகவும் திராவிட சித்தாந்தத்தை கொள்கையாக ஏற்றுக் கொண்டவரும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவருமான தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு அருகே உள்ள கண்ணந்தங்குடி கீழையூர் கிராமத்தில் பிறந்த **திரு. எல். கணேசன்** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### மகாகவி பாரதியார் விருது



பாரதியார் புகழ் பரப்பும் வகையில் கவிதை உரை நடை நூல்களைப் படைத்தோர் பிறவகையில் தமிழ்த் தொண்டு புரிவோருக்கு மகாகவி பாரதியார் விருது 1997ஆம் ஆண்டு முதல் வழங்கப் பெற்று வருகிறது. இதுகாறும் 27 அறிஞர்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். இவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு "படிக்கட்டெல்லாம் பைந்தமிழ்ப் பாடும் பச்சையப்பர் ஆடவர் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் இளங்கலை முதுகலை பயின்று கல்லூரி காலங்களிலேயே அனைத்து கவிதை போட்டிகளிலும் முதலிடம் பெற்றுதமிழ் உலகமே பாராட்டிய கவிஞர் திலகமாகவும் திரைப்படங்களின் வாயிலாக இளைஞர்கள் உலகத்தில் மாபெரும் எழுச்சியையும் மகிழ்ச்சியையும் தன் திரை வரிகளால் உள்ளங்கவர் கவிஞராக பீடு நடை போடும் **கவிஞர் கபிலன்** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### பாவேந்தர் பாரதிதாசன் விருது



தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது 1978ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பாவேந்தர் நூற்றாண்டு தொடக்கவிழா மற்றும் நிறைவு விழாவில் வழங்கப்பட்ட விருதுகளோடு சேர்த்து இதுகாறும் 88 அறிஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு "கல்லூரி மாணவராய் விளங்கியபோதே கவிதை நூல் வெளியிட்டவரும் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவரும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை மற்றும் கவியரசு கண்ணதாசன் ஆகியோரின் பாராட்டுகளோடு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவருமான **கவிதைப் பேரொளி பொன். செல்வகணபதி** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது



சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது 1979ஆம் ஆண்டு முதல் வழங்கப்பெற்று வருகிறது. இதுகாறும் 45 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு "பள்ளிப் படிப்பு முதற்கொண்டே பொது வாழ்வு நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டிவருபவரும் சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கத்தை நிறுவி, அவ்வமைப்பின் பொதுச் செயலாளராக செயல்பட்டு வருபவரும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, டாக்டர் கலைஞரும் சமூக நீதியும் என்ற தலைப்பில் அமைக்கப்பட்ட குழுவில் செயல்பட்டவரும் பல்வேறு நாளிதழ்களிலும், இதழ்களிலும் சமூகப் பொருளாதார அரசியல் கருத்துக்களை குறித்தும், மருத்துவ அறிவியல் பொருண்மைகள் குறித்தும் ஏராளமான கட்டுரைகளையும், பல்வேறு தலைப்புகளில் குறுநூல்களையும் எழுதியவருமான **மருத்துவர் ஜி.ஆர்.இரவீந்திரநாத்** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது



சிறந்த தமிழறிஞர் ஒருவருக்கு முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது 2000ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 22 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு "தமிழ் மாணவர் கழகம், திராவிட மாணவர் கழகம், தமிழிசை இயக்கம், தமிழியக்கம், பகுத்தறிவாளர் கழகம், கைலாசபதி இலக்கிய வட்டம், ஓர்மை, இலக்கு ஆகிய இயக்கங்களில் பணியாற்றியவரும் தமிழ்நாட்டரசின் கலைஞர் நூற்றாண்டு - கலைஞர் எழுத்தாளர் குழு உறுப்பினராகவும் பணியாற்றிய **திரு.வே.மு.பொதியவெற்பன்** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விருது பெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்பெறுவார்கள்.

### தந்தை பெரியார் விருது



சமூக நீதி கிடைக்க பாடுபட்டவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு தந்தை பெரியார் விருது 1995ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 29 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. அவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு "1969ல் மயிலாடுதுறையில் திராவிடர் கழகத்தின் இளைஞரணியில் இணைந்து பெரியாரியம் சம்பந்தமாக பொதுக்கூட்டங்கள் மற்றும் மந்திரமா? தந்திரமா? போன்ற பல பகுத்தறிவு நிகழ்ச்சிகளை நடத்தி பெரியாரின் கொள்கைகளைப் பற்றி அதிகம் பேசவும் எழுதவும் தொடங்கியவரும் பெரியாரை அழைத்து மயிலாடுதுறையில் பொதுக்கூட்டம் மற்றும் கருத்தரங்கம் நடத்தியவரும் 1970ல் ஆசிரியர் என்று அழைக்கப்படும் கி.வீரமணி அவர்களின் வழிகாட்டுதலோடு விடுதலை உண்மை ஆகிய இதழின் விநியோகப் பணியில் ஈடுபட்டவருமான **திரு. விடுதலை இராஜேந்திரன்** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### அண்ணல் அம்பேத்கர் விருது



தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அரிய தொண்டு செய்பவருக்கு ஆண்டுதோறும் அண்ணல் அம்பேத்கர் விருது 1998ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 26 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. அவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு "எழுத்தாளர், வழக்கறிஞர் அரசியல்வாதி மற்றும் சாதி எதிர்ப்பு ஆர்வலர் என பன்முகங்களில் இயங்கி வருபவரும் அம்பேத்கார் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவரும் நிறப்பிரிகை மற்றும் மணற்கேணி இதழ்களின் ஆசிரியராகத் திகழ்ந்தவரும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவரும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள சீர்காழி வட்டத்தில் காவிரிக்கரை கிராமமான மாங்கணாம்பட்டில் பிறந்தவருமான நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.து.இரவிக்குமார்** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தந்தை பெரியார் விருது மற்றும் அண்ணல் அம்பேத்கர் விருது பெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஐந்து இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்பெறுவார்கள்.

### முத்தமிழறிஞர் கலைஞர் விருது



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும்வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அடியொற்றி தமிழுக்குத் தொண்டாற்றும் ஒருவருக்கு வழங்கும் வகையில் "முத்தமிழறிஞர் கலைஞர் விருது" 2024இல் தோற்றுவிக்கப்பட்டது. முதன் முறையாக இவ்விருக்கு "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்பு உதவியாளராகப் பணியாற்றியவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கைகளைத் தொடர்ந்து பின்பற்றுபவரும், மைசூர், இந்திய மொழிகள் நிறுவனத்தில் பணியாற்றியவரும் தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனப் பணிகளில் தொண்டாற்றியவரும் வயது வந்தோர் கல்வித் துறையின் திங்களிதழில் பணியாற்றியவரும், கலைஞர் செதுக்கிய தமிழகம், தியாகிகளைப் போற்றிய தியாகச்சீலர் கலைஞர், காவிரி நீர்ப் போரில் கலைஞரும் தளபதியும் ஆகிய நூல்களை எழுதியவருமான **திரு. முத்து வாவாசி** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் விருது பெறும் விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூபாய் பத்து இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்பெறுவார்.

இவ்விருதுகள் முதலமைச்சர் அவர்களால் திருவள்ளுவர் திருநாளான 15.1.2025 அன்று சென்னையில் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2025) தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பானவேடு தோட்டம் கிராமத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளி செல்வி.அனுசுயாவிற்கு தானியங்கி சக்கர நாற்காலியை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் செல்வி அனுசுயாவின் தாயார் ஆகியோர் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய "கின்னஸ் கலைஞர்" (தமிழ்) மற்றும் கின்னஸ் கலைஞர் (ஆங்கிலம்) ஆகிய இரு நூல்கள் நேற்று (4–1–2025) சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் நடைபெற்ற புத்தகக் காட்சி அரங்கில் வெளியிடப்பட்டது. இதன் தமிழ் பிரதியை தலைமையேற்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட முதல் பிரதியை மேனாள் காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் சைலேந்திரபாபு பெற்றுக்கொண்டார். ஆங்கில நூலின் முதல் பிரதியை உலக சதுரங்க சாம்பியன் குகேஷ் பெற்றுக்கொண்டார். திருவண்ணாமலை ஆதீன குருமகா சன்னிதானம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மற்றும் இந்து நாளேட்டின் மேனாள் ஆசிரியர் என்.ராம் ஆகியோர் வாழ்த்துரை நல்கிட நூலாசிரியர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நன்றி கூறி ஏற்புரையாற்றினார். முன்னதாக எமரால்டு பதிப்பக உரிமையாளர் முனைவர் கோ.ஒளிவண்ணன் வரவேற்புரையாற்றினார். திருமகள் நிலைய உரிமையாளர் டாக்டர் பழனியப்பன் முன்னிலையேற்று உரையாற்றினார் கவிஞர் இளையகம்பன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.